## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2011–12

**முன்னுரை**

மனித வளமே மாநிலத்தின் மிகச் சிறந்த மூலதனமாகும். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின சமூகத்தினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கு இணக்கமானதொரு சூழலை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்த இவ்வரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் போன்ற நிலைகளில் தங்களது நிலையினை உயர்த்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் அளிக்கும் பொருட்டும், சமுதாயத்திலுள்ள இதர பிரிவினருக்கு சமமான நிலையினை அனைத்துத் துறைகளிலும் அவர்கள் அடைவதை இலக்காகக் கொண்டும், பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்படுத்தும் இத்தகைய திட்டங்கள் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரகம் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் ஆகிய மூன்று இயக்குநரகங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி நிலைகளைக்

குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்த தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு கொள்கையின் மூலம் இப்பிரிவினர் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில்வதற்கும், அரசுத்துறைகளில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது.

## 2. இடஒதுக்கீடு

கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் மக்கட்தொகைக்கேற்ப தங்களுக்குரிய பங்கினைப் பெறமுடியாமல் நீண்ட காலமாக இருந்து வந்த சமுதாயத்தினரது வாழ்வில் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 1921 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கை தற்போது 69 விழுக்காடு என்ற அளவினை எட்டியுள்ளது :-



| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர் | ⏩ | 18 விழுக்காடு* |
| பழங்குடியினர் | ⏩ | 1 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்டவகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் நீங்கலாக) | ⏩ | 26.5 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | ⏩ | 3.5 விழுக்காடு |
| மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | ⏩ | 20 விழுக்காடு |

* தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படும் இடங்களில் 16 விழுக்காடு இடங்கள் அருந்ததியினர் வகுப்பினருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

ii) மண்டல் குழு வழக்குகள் என்று அறியப்பட்ட இந்திராசஉறானி <u>**எதிர்**</u> மைய அரசு வழக்கில் அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) இன் கீழான மொத்த இடஒதுக்கீட்டினை 50 விழுக்காட்டிற்குக் கட்டுப்படுத்தி மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் அரசுப் பணிகளுக்கான

நியமனங்கள் ஆகியவற்றில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்ட நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாடு அரசு விரைந்து செயல்பட்டு 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 45/1994) நிறைவேற்றியது. பின்னர் அரசியலமைப்பு சட்டத்தின் கூறு 31-Bஇன் கீழ் பாதுகாப்புப் பெறும் பொருட்டு மேற்குறிப்பிட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் 9–வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. சமூக நீதி வரலாற்றில் இது ஒரு சரித்திரச் சாதனையாகும்.

iii) தமிழ்நாடு சட்டம் 45/1994இன் செல்லும் தன்மையினை எதிர்த்து பல்வேறு நீதிப்பேராணை மனுக்கள் உச்சநீதிமன்றத்தில்



தாக்கல் செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனுக்களில் 13.07.2010 அன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் ஒரு மாநிலம் 50 விழுக்காட்டிற்கு மேல் இடஒதுக்கீடு வழங்க விரும்பினால், அதன் முடிவு எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. மேலும், அரசு எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், இடஒதுக்கீட்டின் அளவு குறித்த பரிந்துரையினை ஆணையம் ஓராண்டு கால அளவிற்குள் அளிக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தது. வளமான பிரிவினரை நீக்கம் செய்ய கட்டளை பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் 03.01.2011 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையில் மேற்குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வளமான பிரிவினர் குறித்த பொருள் மீதும்

முடிவெடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு கட்டளையிடப்பட்டது.

iv) மேற்குறிப்பிட்டதற்கிணங்க ஆணையம் கோரிய புள்ளி விவரங்கள் அரசால் அளிக்கப்பட்டன. நீதியரசர் திரு. எம். எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மேற்குறிப்பிட்ட இரு பொருட்கள் குறித்து ஆய்வு செய்து அதன் அறிக்கையினை 08.07.2011 அன்று அரசுக்கு அளித்தது. அதில் பல்வேறு வகுப்புகளின் மக்கட்தொகையினைக் கருத்தில் கொள்ளும்போது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டின் அளவு நியாயமாக உள்ளது என்றும், தமிழ்நாடு சட்டம் 45/1994-ஐ செயல்படுத்துவதைப் பொறுத்தவரை வளமான பிரிவினரை நீக்கம் செய்வதற்கான அவசியம் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆணையத்தின் பரிந்துரையினை அரசு ஏற்றுக் கொண்டு, கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை



மற்றும் மாநில அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை நீட்டித்து 11.07.2011 அன்று ஆணை வெளியிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய காலத்தில் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 69 விழுக்காடு இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது.

## 3. கல்வி

கல்வியே சமுதாய வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கான அளவுகோலாகக் கருதப்படுவதால் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்திவருகிறது.

குறிப்பாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், விடுதிகள் பராமரிப்பு, கல்வி உதவித் தொகை வழங்குதல், இலவச சீருடை, இலவச பாடப்புத்தகங்கள் வழங்குதல் , இலவச மிதிவண்டிகள்

வழங்குதல் மற்றும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் போன்றவை கல்வி வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## 4 . கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் அவர்களது வாழ்வில் முன்னேற்றம் பெற கல்வி கற்பது இன்றியமையாதது என்று கருதும் இந்த அரசு, ஏழை மாணவ, மாணவியர் அவர்களது கல்வியைத் தொடர பொருளாதார ரீதியாக உதவும் பொருட்டு, பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வித் திட்டம் என்ற மூன்று வகையான கல்வி உதவித் தொகைகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி வருகிறது.



### 4.1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால் இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும் தமிழ் வழிக்கல்வி பயிலும் 10ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் விளைவாக பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்விப் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000-க்கு மிகாமல் இருக்கவேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற

நிபந்தனைகளுக்குட்பட்டு கல்விக்கட்டணம் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

- **6** ஆம் வகுப்பு முதல் **8** ஆம் வகுப்பு வரை மாதம் ஒன்றுக்கு **ரூ.20/–** வீதம் **10** மாதங்களுக்கு ரூ. **200/–**
- **9** மற்றும் **10** ஆம் வகுப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு **ரூ.25/–** வீதம் **10** மாதங்களுக்கு ரூ. **250/–**
- **10**ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.
- **<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கான சிறப்பு சலுகை</u>**

மேலே குறிப்பிட்ட கல்வி உதவித்தொகை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்



மாணவர்களுக்கு அதே விகிதத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010-11 ஆம் ஆண்டில் 77,094 மாணவ, மாணவிகளுக்கு **ரூ.137.89** இலட்சம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட்டது:-

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ | மொத்தம் | பிவ | மிபிவ | மொத்தம் |
| 43,466 | 33,628 | 77,094 | 103.55 | 34.34 | 137.89 |

இத்திட்டத்தின் கீழ் **2011**-12ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.126.33 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.117.93 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.244.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, மாதம் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/– படிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது. மேலும் 12 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்வுக் கட்டணம் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.



➢ **மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கான சிறப்பு சலுகை**

மேலே குறிப்பிட்ட கல்வி உதவித்தொகை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு அதே விகிதத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி படிப்பு, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம், படிப்புக்கட்டணம், புத்தகக்கட்டணம் ஆகியன கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், தேர்வுக்கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010-11 ஆம் ஆண்டில் 1,15,385 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2479.44 இலட்சம் கீழ்குறிப்பிட்டவாறு செலவிடப்பட்டது:-

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ | மொத்தம் | பிவ | மிபிவ | மொத்தம் |
| 77,869 | 37,516 | 1,15,385 | 1583.05 | 896.39 | 2479.44 |

இத்திட்டத்தின் கீழ் **2011**-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**1485.06** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**890.00** இலட்சமும் ஆகமொத்தம் ரூ.2375.06 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5. இலவசக் கல்வி

### 5.1. பட்டப்படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவசக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம், திரும்பப்பெற இயலாத கட்டாயக்கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் 1,36,815 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1779.45 இலட்சம் கீழ்குறிப்பிட்டவாறு செலவிடப்பட்டது:-

| **பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ | மொத்தம் | பிவ | மிபிவ | மொத்தம் |
| 81,834 | 54,981 | 1,36,815 | 1075.21 | 704.24 | 1779.45 |

இத்திட்டத்தின் கீழ் **2011**-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.1091.49 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.620.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.1711.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## <u>5.2. பட்டயப்படிப்பு</u>

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ், தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்குப் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது மற்றும் பயனாளி குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக்கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் 22,468 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.703.14 இலட்சம் கீழ்குறிப்பிட்டவாறு செலவிடப்பட்டது:-

| **பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| **பிவ** | **மிபிவ** | **மொத்தம்** | **பிவ** | **மிபிவ** | **மொத்தம்** |
| **14,230** | 8,238 | 22,468 | 458.99 | 244.15 | 703.14 |

இத்திட்டத்தின் கீழ் **2011**-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.550.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.320.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.870.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5.3. தொழிற்படிப்பு

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்குப் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது மற்றும் பயனாளி குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியன அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக்கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2010–2011** ஆம் ஆண்டில் **69,815** மாணவ, மாணவியர்களுக்கு ரூ.**4134.09** இலட்சம் கீழ்குறிப்பிட்டவாறு செலவிடப்பட்டது:-

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ | மொத்தம் | பிவ | மிபிவ | மொத்தம் |
| 42,406 | 27,409 | 69,815 | 2517.64 | 1616.45 | 4134.09 |

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.2272.75 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு



ரூ.1500.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.3772.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு விரைவாக உதவித்தொகை வழங்கும் பொருட்டும், இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்யும் பொருட்டும் மின்னாளுமை திட்டத்தின் கீழ் தேசிய தகவல் தொகுப்பு மையத்தால் மென்பொருள் உருவாக்கப்பட்டு இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (www.edistrict.tn.nic.in)

இத்திட்டத்தினை செயற்படுத்த ஏதுவாக ஒவ்வொரு கல்வி நிலையத்திற்கும் அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது.

(User ID / Password). கல்வி நிலையங்களில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளும்/கட்டண விவரங்களும் முழுமையாக முன்னரே பதிவு செய்யப்பட்டுள்ளது. உதவித்தொகை கோரும் மாணவ/மாணவியரின் விவரங்கள் கல்வி நிலையங்களால் இணையதளத்தில் பதிவு செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. மாவட்ட அலுவலர்களால் கேட்புகள் இணையதளத்திலேயே பரிசீலிக்கப்பட்டு கல்வி நிலையங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு காசோலை/வரைவோலையாக தொகை வழங்கப்பட்டு வந்தது. நடப்பு நிதியாண்டு முதல் கல்வி நிறுவனங்களுக்கு மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கல்வி நிலையங்கள் மாணவர்களுக்கு உதவித்தொகைகளை பட்டுவாடா செய்து அதன் விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்கின்றன.



இம்மென்பொருள் வாயிலாக கல்வி உதவித்தொகை வழங்குதலில் முன்னேற்றம் குறித்து நாள்தோறும் கணினியில் விவரங்கள் ஆய்வு செய்யப்படுவதுடன் சாதனை எய்தாத மாவட்டங்களுக்கு உதவித்தொகைகளை உடன் ஒப்பளிப்பு செய்யவும், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை குறித்த விவரங்களை வழங்கியவுடன் இணையதளத்தில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. கல்வி உதவித்தொகை கேட்புகள் கல்லூரியில் அனுப்புவதிலிருந்து தொடங்கி மாணவர்களுக்கு பட்டுவாடா செய்யப்படும் வரையிலான விவரத்தினை அரசளவிலும், இயக்ககங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பயன்பெறும் மாணவ, மாணவிகளும் இணையதளம் வாயிலாக துல்லியமாக கண்காணிக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**7. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு கிராமப்புற பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்**

கிராமப்புற பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பக்கல்வி நிலையில் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் கைவிடுவதைக் கணிசமாக குறைக்கும் பொருட்டு அரசு கிராமப்புறங்களில் **3** முதல் **5**ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு பெண் குழந்தைகளுக்கு மாணவி ஒருவருக்கு வருடத்திற்கு ரூ.**500/–** வீதமும், **6**ஆம் வகுப்பில் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.**1000/–** வீதமும் ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010-11 ஆம் ஆண்டில் 1,05,000 மாணவியருக்கு ரூ.700.00 இலட்சம் செலவிடப்பட்டது.



இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.700.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. விடுதிகள்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்–பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காக மொத்தம் **1,238** விடுதிகள் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் **692** விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் **540** விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் **6** இஸ்லாமிய மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.**1,00,000/–**க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் இந்த விடுதிகளில் சேர

அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விடுதிகளில் 74302 மாணவ, மாணவியர்கள் எவ்வித கட்டணமுமின்றி தங்கி படித்துப் பயன்பெற்று வருகின்றனர். இவ்விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியருக்கு, கட்டணமின்றி உணவு அளிப்பதோடு மாதந்தோறும், பல்வகைச் செலவினமாக, பள்ளியில் பயில்வோர்க்கு ரூ.25/– மற்றும் கல்லூரியில் பயில்வோர்க்கு ரூ.35/– வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் ரூ.10676.09 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.7053.25 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.6124.91 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.13178.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 8.1. விடுதிகளின் விவரம்

| விடுதிகள் | கல்லூரி | | | பள்ளி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பிவ | 49 | 36 | 85 | 388 | 219 | 607 | 437 | 255 | 692 |
| மிபிவ | 19 | 11 | 30 | 244 | 117 | 361 | 263 | 128 | 391 |
| சீம | 7 | 6 | 13 | 89 | 47 | 136 | 96 | 53 | 149 |
| மொத்தம் | 75 | 53 | 128 | 721 | 383 | 1104 | 796 | 436 | 1232 |
| இஸ்லாமிய மாணவியர் விடுதிகள் | | | | | | | | | 6 |
| மொத்தம் | | | | | | | | | 1238 |

## 8.2 ஒப்பளிக்கப்பட்ட மாணவர் / மாணவியர் விவரம்

| விடுதிகள் | கல்லூரி | | | பள்ளி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பிவ | 4670 | 2525 | 7195 | 22040 | 11950 | 33990 | 26710 | 14475 | 41185 |
| மிபிவ | 1387 | 586 | 1973 | 13167 | 5935 | 19102 | 14554 | 6521 | 21075 |
| சீம | 583 | 509 | 1092 | 7185 | 3465 | 10650 | 7768 | 3974 | 11742 |
| மொத்தம் | 6640 | 3620 | 10260 | 42392 | 21350 | 63742 | 49032 | 24970 | 74002 |
| இஸ்லாமிய மாணவியர் விடுதிகள் | | | | | | | | | 300 |
| மொத்தம் | | | | | | | | | 74302 |

## ➢ மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கான சிறப்பு சலுகை

மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயின்று 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த முதல் மூன்று மாணவர்/மாணவியர்களுக்கு முதல் பரிசு ரூ.3000/–, இரண்டாம் பரிசு ரூ.2000/–, மூன்றாம் பரிசு ரூ.1000/– 2004–2005 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

## 8.3 சிறந்த காப்பாளர் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள்

2004–05 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் விடுதிகளில் செம்மையான முறையில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர் / காப்பாளினிகள் தேர்வு செய்யப்பட்டு முதல்



பரிசாக ரூ.5000/–, இரண்டாம் பரிசாக ரூ.3000/– மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 2000/– வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.0.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8.4 விடுதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இதர வசதிகள்

1. அனைத்து விடுதிகளுக்கும் மாவரைக்கும் இயந்திரம், வண்ணத்தொலைக்காட்சிப்பெட்டி, விளையாட்டுச் சாதனங்கள், நீர் சுத்திகரிப்புக்கருவி, புத்தக அலமாரி, நூலகப் புத்தகங்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
2. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பொது அறிவினை மேம்படுத்தும் பொருட்டு ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

3. விடுதிகளில் தங்கி நான்கு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வருடத்திற்கு 2 ஜோடி பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன.
4. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்துப் பாடப்புத்தகங்களும் இலவசமாகக் கல்வித்துறை மூலம் வழங்கப்படுகின்றன.
5. விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அவர்கள் பொதுத் தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்றிட விலையேதுமின்றி சிறப்பு வழிகாட்டி வழங்கப்படுகிறது.
6. விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் பாய், பெட்ஷீட், எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்படுகின்றன. தவிர மலைப்பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு கம்பளி ஆடை (உல்லன் ஸ்வெட்டர்) வழங்கப்படுகிறது. மேலும் பள்ளி விடுதி மாணவர்கள் அனைவருக்கும் ஆங்கிலம் – தமிழ்



சொல் அகராதி மற்றும் உலக வரைப்படங்கள் அடங்கிய புத்தகம் ஆகியவை வழங்கப்படுகின்றன.
7. விடுதி மாணவர்கள் அனைவருக்கும் ஆண்டு தோறும் அவர்களின் உடல்நிலையினைக் கண்காணிக்கும் பொருட்டு மூன்றுக் கட்டங்களாக மருத்துவப் பரிசோதனை முகாம் நடத்தப்படுகிறது.
8. விடுதி மாணவ, மாணவியர்களுக்கு வாரத்திற்கு மூன்று வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாத மாணவ, மாணவியர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.
9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரத்தில் ஒருநாள் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் வாரத்தில் ஒருநாள் கோழி இறைச்சியும் விடுதி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 9. விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 1238 விடுதிகளில் 942 விடுதிகள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 148 விடுதிகளுக்கு சொந்தக்கட்டடம் கட்டும்பணி பொதுப்பணித்துறையில் மேற்கொள்ளப்பட்டு அவை பல்வேறு நிலைகளில் உள்ளன. மீதமுள்ள 148 விடுதிகள் தற்போது தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு கட்டடம் கட்ட ரூ.2778.96 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.2109.09 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1500.20 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.3609.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 10. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் இல்ல மாணவ, மாணவியர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.450/– வீதம் ஒரு வருடத்தில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் ஒப்பளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் 1588 மாணவ, மாணவிகளுக்கு ரூ.70.18 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.22.70 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு

ரூ.37.67 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.60.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 285 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-



### கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் விவரம்

### மாணவ / மாணவியர் எண்ணிக்கை

| வ. எண். | பள்ளிகள் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை | மாணவியர்கள் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மேல்நிலைப்பள்ளி | 24 | 9,087 | 6,592 | 15,679 |
| 2. | உயர்நிலைப்பள்ளி | 21 | 2,804 | 2,484 | 5,288 |
| 3. | நடுநிலைப்பள்ளி | 28 | 2,198 | 2,080 | 4,278 |
| 4. | ஆரம்பப்பள்ளி | 212 | 7,391 | 6,918 | 14,309 |
| மொத்தம் | | **285** | **21,480** | **18,074** | **39,554** |

இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் வகுப்பு வாரியாக எண்ணிக்கை விவரம்:-

| | | |
|---|---|---|
| 1. | வகுப்பு 1 முதல் 5 வரை | 17,240 |
| 2. | வகுப்பு 6 முதல் 10 வரை | 18,585 |
| 3. | வகுப்பு 11 மற்றும் வகுப்பு 12 | 3,729 |
| | **மொத்தம்** | **39,554** |

சென்ற கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் படித்து தேர்ச்சி அடைந்த மாணவர்களின் சதவிகிதம் முறையே 85% மற்றும் 84% ஆகும்.

2010–11 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்கு ரூ.4,671.44 இலட்சம் செலவிடப்பட்டது.

2011-12 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்கு ரூ.5165.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.1. கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியர்–களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பள்ளிகளின் கல்வித் தரத்தினை உயர்த்தும் பொருட்டும், அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களிடையே அதிக மதிப்பெண்கள் பெறும் உணர்வினை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் படித்து 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெறும் மாணவர் அல்லது மாணவிக்கு முறையே



ரூ. 3000/– மற்றும் ரூ. 2000/– பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் 3 மாணவ, மாணவியருக்குப் பரிசுத் தொகை தலா ரூ.1,000/– வழங்கப்படுகிறது.

## 11.2. எழுது பலகைகள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு எழுதுபலகைகளையும், மூன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்களையும் அரசு விலையேதுமின்றி வழங்கி வருகிறது. இதன்மூலம் சென்ற கல்வி ஆண்டில் ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயின்ற 9,891 மாணவர்களும், மூன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயின்ற 29,141 மாணவர்களும் பயன் பெற்றுள்ளனர். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும்

அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் பாடப்புத்தகங்கள் அரசால் வழங்கப்படுகின்றன.

## 11.3. சீருடைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் ஆண்டிற்கு இரண்டு பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் விடுதி மாணவியர்களுக்கு சுடிதார் சீருடைகள் வழங்கப்படுகின்றன.



இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயின்ற 32,636 மாணவ, மாணவிகளுக்கு ரூ.81.18 இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயின்ற 35,659 மாணவ, மாணவிகளுக்கு ரூ.234.83 இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டன.

2011-12 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்குவதற்காக ரூ.129.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்க ரூ.355.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. பரிசுத் திட்டங்கள்

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆர்வத்தை பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியரிடையே ஊக்குவிக்கும் பொருட்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன:-



### 12.1 மாநில அளவிலான பரிசுகள்

**12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு**

| பரிசுகள் விவரம் | பரிசுத் தொகை | |
|---|---|---|
| | பி.வ. | மிபிவ/சீம |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள். | ரூ.50,000 | ரூ.50,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு இரண்டாம் பரிசுகள் | ரூ.30,000 | ரூ.30,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.20,000 | ரூ.20,000 |

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு

| பரிசுகள் விவரம் | பரிசுத் தொகை | |
|---|---|---|
| | பி.வ. | மிபிவ/சீம |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் | ரூ.25,000 | ரூ.25,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு இரண்டாம் பரிசுகள் | ரூ.20,000 | ரூ.20,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.15,000 | ரூ.15,000 |



## 12.2. மாவட்ட அளவிலான பொதுப் பரிசுகள்

12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு

| பரிசுகள் விவரம் | பரிசுத் தொகை | |
|---|---|---|
| | பி.வ. | மிபிவ/சீம |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் | ரூ.3,000 | ரூ.3,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு இரண்டாம் பரிசுகள் | ரூ.2,000 | ரூ.2,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.1,000 | ரூ.1,000 |

**10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு**

| பரிசுகள் விவரம் | பரிசுத் தொகை | |
|---|---|---|
| | பி.வ. | மிபிவ/சீம |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் | ரூ.1,500 | ரூ.1,500 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு இரண்டாம் பரிசுகள். | ரூ.1,000 | ரூ.1,000 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.500 | ரூ.500 |

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் 960 மாணவ, மாணவிகளுக்கு ரூ.21.44 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.9.55 இலட்சமும்,



மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.10.48 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.20.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. பேரறிஞர் அண்ணா நினைவு விருது

ஒவ்வொரு மாவட்டத்திலும் **12** ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலாவது மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு ரூ.**5000/–** வீதம் கல்லூரிப் படிப்பு முடியும் வரை பேரறிஞர் அண்ணா நினைவு விருது வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் 925 மாணவ, மாணவிகளுக்கு ரூ.46.25 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.30.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.30.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. தந்தை பெரியார் நினைவு விருது

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பப் பட்டயப் படிப்பில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு



ரூ.5000/– வீதம் மூன்று வருடங்களுக்கு தந்தை பெரியார் நினைவு விருது வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் 716 மாணவ, மாணவிகளுக்கு ரூ.35.80 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**20.00** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.17.55 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.37.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயில்வதற்கு நிதியுதவி வழங்குதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் படித்து 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 10 மாணவ, மாணவியர்கள் (பிற்படுத்தப்பட்ட வகுப்புகளிலிருந்து மூன்று மாணவர்கள், மூன்று மாணவிகள் மற்றும்

மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்புகளிலிருந்து இரண்டு மாணவர்கள், இரண்டு மாணவிகள்) தங்கள் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயில நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஆண்டொன்றுக்கு ஒரு மாணவ, மாணவிக்கு உயரளவாக ரூ.28,000/– வீதம் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010-11 ஆம் ஆண்டில் 616 மாணவ, மாணவிகளுக்கு ரூ.134.46 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.107.52 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு



ரூ.67.20 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.174.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## <u>16. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்</u>

அரசு , அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு வருமான வரம்பின்றி மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உறைவிடப் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின் கீழ் 2010-11 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 4,25,561 மாணவ, மாணவிகளுக்கு ரூ.11193.12 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.6410.83 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.4797.76 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.11208.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.1. இணையதளம் மூலம் மிதிவண்டிகள் வழங்குதலைக் கண்காணித்தல்**

மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை அரசளவிலும், இயக்ககங்களிலும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் கண்காணிக்கும் வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டு மிதிவண்டிகள் விநியோகம் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. (www.agaram.tn.gov.in/freecycles) இதன்படி ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் தனித்தனி அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பள்ளிகள் மாணவர்களின்



பெயர், வகுப்பு உள்ளிட்ட விவரங்களை முதற்கட்டமாகப் பதிவு செய்கின்றன. மிதிவண்டிகள் வழங்கப்பட்ட பின்னர் மிதிவண்டியின் எண், மிதிவண்டி விநியோகிக்கப்பட்ட நாள் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மிதிவண்டிகளுக்கான இணையதளத்தின் வாயிலாக மாநிலத்தில் வழங்கப்பட்ட மொத்த மிதிவண்டிகளின் எண்ணிக்கை, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் வழங்கப்பட்ட மிதிவண்டிகளின் எண்ணிக்கை, துறை வாரியாக வழங்கப்பட்ட மிதிவண்டிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அரசளவிலும், இயக்ககங்களிலும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பார்வையிட்டு அறிவுரை வழங்கும் வகையில் உள்ளது. மேலும், மிதிவண்டிகள் வழங்கப்படாத இனங்களில், துரிதப்படுத்தி, மிதிவண்டிகளை உடன் வழங்க அறிவுறுத்தும் வகையிலும், திட்டத்தின் செயலாக்கம் குறித்து துல்லியமாக

ஆய்வு செய்யும் வகையிலும் இந்த மென்பொருள் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 17. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, தையல் இயந்திரம் மற்றும் சலவைப்பெட்டிகள் விலை ஏதுமின்றி வழங்கப்படுகிறது.

### 17.1. தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற பயனாளிகளது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000/—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப்



பொறுத்த வரை ரூ. 60,000/—க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2010—11 ஆம் ஆண்டில் 2,359 பயனாளிகளுக்கு ரூ.66.62 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.40.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.26.63 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.66.63 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 17.2. சலவைப் பெட்டிகள் வழங்குதல்

சலவைத் தொழில் செய்யும் ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையேதுமின்றி சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற பயனாளிகளது ஆண்டு

வருமானம், கிராமப்புறங்களை பொறுத்தவரை ரூ.40,000/—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை ரூ. 60,000/—க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2010—11 ஆம் ஆண்டில் 3,115 பயனாளிகளுக்கு ரூ.85.00 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு ரூ.85.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17.3 வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சிகள்

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் தங்களது வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், வருவாய் ஈட்டக் கூடிய சுய தொழில் நடத்துவதற்கான திறனைப் பெறவும் வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சிகள் மைய மற்றும் மாநில அரசுப் பயிற்சி நிறுவனங்கள் மூலமும் தனியார் நிறுவனங்கள் மூலமும்



அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிக்கான கட்டணத் தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. பிளாஸ்டிக் தயாரிக்கும் இயந்திரம் இயக்குதல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், ஆடை தயாரித்தல், ஆடை வடிவமைத்தல், கனரக வாகனம் ஓட்டுதல், உணவக நிர்வாகம் மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம், கணினி தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற பயிற்சியாளர்களின் பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## 18. வீட்டுமனைகள் வழங்குதல்

வீடற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 2.16 இலட்சம் (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 76,847+

மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 1,39,153) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற பயனாளிகளது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000/–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை ரூ.60,000/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டில் 1,491 பயனாளிகளுக்கு ரூ.147.56 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்குப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.300.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.225.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.525.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 19. இந்தியக் குடிமைப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி

சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொண்டு, சமுதாயத்தின் இதர பிரிவினர்களுக்கு இணையாக இந்தியக் குடிமைப்பணி தேர்வுகளில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு உதவியாக சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்கள் வருமான வரம்பின்றி சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் 1,00,000/–க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு இலவச விடுதி வசதியும் அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் பயிற்சியாளர் ஒருவருக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை ரூ. 800/–லிருந்து ரூ. 1200/– ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் **2010–11** ஆம் ஆண்டில் ரூ.**41.57** இலட்சம் செலவிடப்பட்டது.

**2011–2012** ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் ரூ.**55.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள், குழுக்கள், மற்றும் சங்கங்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சிறு தொழில்கள், வணிகம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடனுதவி வழங்கி வருகிறது. **1982** ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இக்கழகத்தால் வழங்கப்படும் கடனுதவி, புதிய தொழில்



தொடங்கி, அதன் மூலம் வருவாய் ஈட்டி பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைய உதவுகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகத்தில் இருந்து நிதியுதவி பெற்று துணை முகமைகளாகச் செயல்படும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக்கழகம், கூட்டுறவு வங்கிகள், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்) ஆகியவற்றின் வழியாக பயனாளிகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குகிறது.

**1993–94**ஆம் ஆண்டிலிருந்து இது வரை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் ரூ.**22455.97** இலட்சம் நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி

மற்றும் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெற்று, இக்கழகத்தின் நிதி பங்களிப்புடன் 2,92,254 பயனாளிகளுக்கு ரூ.22836.62 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

## 20.1. பொது காலக் கடன் திட்டம்

இக்கழகம் தனிநபர்கள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு பொதுக் கடன் திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டியில் கடனாக வழங்குகிறது. இந்த கடன்தொகை 5 ஆண்டு காலத்திற்குள் (20 காலாண்டு தவணைகளில்) திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

## 20.2. மகளிருக்கான புதிய பொற்காலத் திட்டம்

மகளிருக்கான புதிய பொற்கால திட்டத்தின்கீழ், 2010–11 வரை, ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/– கடன் தொகை 4 விழுக்காடு வட்டியில் வழங்கப்பட்டு வந்தது.



2011–12 முதல், அதிகபட்ச கடன் தொகை ரூ.75000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், இதற்கான வட்டி விகிதத்தினை 1 விழுக்காடு உயர்த்தியுள்ளது.

## 20.3. சிறு வணிகக் கடன் திட்டம்

மகளிர் சுயஉதவி குழுக்களில் உறுப்பினராக உள்ள மகளிர் ஒருவருக்கு ரூ.25000/–வீதம், ஒரு குழுவிற்கு அதிக பட்சமாக ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டியில், மகிளா சம்ரிதி யோஜனா திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. ஆடவர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மேலே குறிப்பிட்ட அளவில் 5 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தால் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களில்

மகளிருக்கான புதிய பொற்கால திட்டத்தைத் தவிர இதர திட்டங்களின்கீழ் கடன்பெற ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000/—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.55,000/—க்கு மிகாமலும் இருக்க வேண்டும். மகளிர் புதிய பொற்கால திட்டத்தை பொறுத்தவரை ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.20,000/—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.27,500/—க்கு மிகாமலும் இருக்க வேண்டும். நடப்பு நிதி ஆண்டு முதல், ஆண்டு வருமான வரம்பினை முறையே ரூ.40,000/- மற்றும் ரூ.55,000/- என தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் உயர்த்தியுள்ளது.

இக்கழகம் 2010—11 ஆம் ஆண்டில் பொதுக் கடன் திட்டத்தின் கீழ் 261 நபர்களுக்கு ரூ.106.99 இலட்சமும், மகளிர் புதிய பொற்கால திட்டத்தின்கீழ் 66 நபர்களுக்கு ரூ.14.15 இலட்சமும், மகிளா சம்ரிதி யோஜனா மற்றும் சிறு



வணிகக் கடன் திட்டத்தின்கீழ் 24,485 நபர்களுக்கு ரூ.3496.85 இலட்சமும் ஆக மொத்தம் 24,812 பயனாளிகளுக்கு ரூ.3617.99 இலட்சம் கடன் உதவி வழங்கியுள்ளது.

## 20.4. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் விருது

2009-10ஆம் ஆண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் செயல்பாடுகளை பாராட்டி, **தேசிய அளவில் இரண்டாம் நிலை விருது**, 01.07.2011 அன்று நடைபெற்ற தேசிய கருத்தரங்கில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

2011-12ஆம் ஆண்டில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு செயல்முறை திட்டத்தின்படி 38,273 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.4000 இலட்சம் கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 20.5. சிறு, குறு விவசாயிகளுக்கான மானியத்துடன் கூடிய சிறுபாசன கடன் திட்டம்

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் மாநில அரசின் திட்டம் 2007–2008ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன்பெறும் பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் குழு தேர்வு செய்கிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு உயர் அளவு மானியமாக ரூ.50,000/– வரையிலான 50 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. கடன் தொகையை கொண்டு சொத்து உருவாக்கப்பட்டதற்கான (Asset Creation) அறிக்கை வரப்பெற்றவுடன் பின்நிகழ்வாக (back ended) மானியத்தொகை இக்கழகத்தால் வழங்கப்படுகிறது.



இதுவரை 385 விவசாயிகள் ரூ.186.92 இலட்சம் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர்.

இக்கழகத்தினால் வழங்கப்பட்ட கடனில் 90 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 21. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள் அவர்களுக்கு சென்று சேர்வதை உறுதிசெய்யும் பொருட்டு “சீர்மரபினர் நல வாரியம்” அமைக்கப்பட்டுள்ளது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு “விபத்து நிவாரணம், கல்வி

உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்'' ஆகிய நலத் திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 31.03.2011 வரை இவ□வாரியத்தின□கீழ□ 28,463 உறுப்பினர்கள□ பதிவு செய□யப்பட்டு 28,344 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ□வாரியத்திற□கென ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய□யப்பட்டுள□ளது. 1,972 உறுப்பினர்களுக்கு ரூ. 27.26 இலட்சம் அளவில□ பல□வேறு நலத்திட்ட உதவிகள□ வழங்கப்பட்டுள□ளன.

**<u>சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்** | | | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |



| | | | |
|---|---|---|---|
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2000 |
| **4. கல்வி உதவித்தொகை** | | | |
| | அ) | 10ஆம்வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | ஆ) | 10ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1000 ஒருமுறை |
| | இ) | 11ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | ஈ) | 12ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1500 ஆண்டுக்கு |
| | உ) | 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1500 ஒருமுறை |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்புக்கு | ரூ.1500 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1750 ஆண்டுக்கு |
| | எ) | (i) முறையான பட்டமேற்படிப்புக்கு | ரூ.2000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.3000 ஆண்டுக்கு |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் மேற்படிப்புக்கு | ரூ.2000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு | ரூ.4000 ஆண்டுக்கு |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற் படிப்புக்கு | ரூ.4000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு | ரூ.6000 ஆண்டுக்கு |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு | ரூ.1200 ஆண்டுக்கு |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2000 |

| | | |
|---|---|---|
| **6.** | **மகப்பேறு உதவித்தொகை** | |
| | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6000 |
| 7. | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.500 |

## 22. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து நரிக்குறவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யவும் ''தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்'' மாநிலத்தில் இயங்கி வருகிறது.



அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு ''விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்'' ஆகிய நலத்திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**31.03.2011** வரை இவ்வாரியத்தின் கீழ் **9,762** உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு **9,331** உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

நரிக்குறவர்கள் தனியாகவோ, கூட்டாகவோ சுயதொழில் தொடங்கி தங்கள் பொருளாதாரத்தை

மேம்படுத்திக் கொள□ளும் வகையில□ தனிநபர் தொழில□ துவங்குவதற□காக ரூ.7500/- மானியமாகவும், கூட்டாகத் தொழில□ தொடங்குவதற□கு அதிகபட்ச மானியமாக ரூ.1,25,000/– பின்நிகழ்வாக (Back ended subsidy) வழங்கப்படுகிறது.

## <u>தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்** | | | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2000 |
| **4. கல்வி உதவித்தொகை** | | | |
| | அ | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு | ரூ.500/– ஆண்டிற்கு |
| | ஆ | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1000/– ஆண்டிற்கு |
| | இ | 10ஆம்வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | ஈ | 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1000 ஒருமுறை |



| | | | |
|---|---|---|---|
| | உ | 11ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | ஊ | 12ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1500 ஆண்டுக்கு |
| | எ | 12ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1500 ஒருமுறை |
| | ஏ) | (i) முறையான பட்டப்படிப்புக்கு | ரூ.1500 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1750 ஆண்டுக்கு |
| | ஐ) | (i) முறையான பட்டமேற்படிப்புக்கு | ரூ.2000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.3000 ஆண்டுக்கு |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு | ரூ.2000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு | ரூ.4000 ஆண்டுக்கு |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற் படிப்புக்கு | ரூ.4000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு | ரூ.6000 ஆண்டுக்கு |
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு | ரூ.1000 ஆண்டுக்கு |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு | ரூ.1200 ஆண்டுக்கு |
| **5. திருமண உதவித்தொகை** | | | ரூ.2000 |
| **6. மகப்பேறு உதவித்தொகை** | | | |
| | அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6000 |
| | ஆ | கருச்சிதைவு/கருக்கலைப்பு | ரூ.3000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.500 |
| **9. தொழில்தொடங்க மானியம்** | | | |
| | அ | தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம் | ரூ.7500/– |
| | ஆ | குழுவாகத் தொழில் தொடங்க மானியம் | ரூ.10000/– தனிநபருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | (அல்லது)ரூ.1,25,000/– அதிகபட்சமாக குழுவிற்கு |

இவ்வாரியத்திற்கென ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3,593 உறுப்பினர்களுக்கு ரூ.197 இலட்சம் அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 23. வன்னியர் பொதுச்சொத்து நல வாரியம்

வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக உயிலாக எழுதிவைக்கப்பட்ட அறக்கட்டளைச் சொத்துக்களை அடையாளம் கண்டு, அந்த அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றவும், அவைகளை ஒருங்கிணைத்து அவைகள் உருவாக்கப்பட்ட நோக்கங்களின் பலன்கள் அனைத்தும் உரிய பகுதியினருக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்கும், ''வன்னியர் பொதுச்சொத்து நல வாரியம்'' அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.



இவ்வாரியத்தின் தனி அலுவலராக திரு கோ. சந்தானம், இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். இவ்வாரியப் பணிகளை மேற்கொள்ள ஓய்வு பெற்ற மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி நிலையில் ஒரு சட்ட ஆலோசகர், ஒரு தனி வட்டாட்சியர், ஒரு உதவியாளர், ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு தகவல் பதிவு அலுவலர் ஆகிய 5 அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 76 வன்னியர் பொதுச்சொத்துக்கள் / அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## 24. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் கூறு 340 ஆகியவற்றின் கீழ் ஒரு நிலையான அமைப்பாக

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தவையாகும். இவ்வாணையத்தின் செயல் வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக அல்லது குறைவாக சேர்த்திருப்பது குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;



(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்கும்;

இவ்வாணையம் நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்களுடன் **05.07.2011** முதல் ஓராண்டு காலத்திற்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## <u>25. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது</u>

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கி அரசு சிறப்பு செய்கிறது. இவ்விருது **1994** ஆம் ஆண்டு

ஏற்படுத்தப்பட்டு 1995 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டிற்கு ரூ.1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 26. சிறுபான்மையினர் நலன்

சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத்திட்டங்களை தீட்டுவதிலும் செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சிறுபான்மையினருக்கு தரமான கல்வி வழங்குவதன் மூலமே அவர்களது பின்தங்கிய நிலைமையை உயர்த்த இயலும் என்ற அவசியத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் கல்வி மேம்பாட்டிற்காக அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.



## 27. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு

தனி இட ஒதுக்கீடு கேட்டு பல்வேறு இஸ்லாமிய பிரிவினரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் மீது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரைகளைப் பெற்று, பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30% இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 28. கல்வி உதவித் தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை தடையின்றி தொடர்ந்து பயிலும் வகையில் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்கள் சென்றடையும் விதத்தில் இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

## 28.1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் மைய மற்றும் மாநில அரசுகளின் (75:25) நிதி பங்களிப்புகளுடன் 2008–09ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில 30 விழுக்காடு மாணவியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மிகாமலும் முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெறறிருக்கும் மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக சேர்க்கை கட்டணம் ரூ.500/–, கற்பிப்புக் கட்டணம் அதிகபட்சமாக



ஆண்டுக்கு ரூ.3500/– வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600/– வீதமும், ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100/– வீதமும் ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் ரூ.2862 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கென மைய அரசால் 75 சதவீத பங்களிப்பாக ரூ.2266 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28.2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகை

பெற பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதுடன், மாணவ, மாணவியர்கள் முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தலும் வேண்டும். இத்திட்டத்தில் 30 விழுக்காடு மாணவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

01.04.2011 முதல் விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.380/– முதல் ரூ.1200/– வரையிலும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.230/– முதல் ரூ.550/– வரை பராமரிப்புக் கட்டணமும், மேலும் இத்திட்டத்தின் கீழ் ரூ.3000/– முதல் ரூ.10000/– வரை சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் 33,695 மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.1017 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டில்



இத்திட்டத்திற்கென மைய அரசால் ரூ.1691 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28.3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டம் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில ஊக்குவிக்கும் பொருட்டு மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்கல்வி நிலையங்களில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மை இன மாணவ, மாணவியர்களுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணம் அல்லது ரூ.20000/– இவற்றில் எது குறைவோ அத்தொகையுடன் பராமரிப்புக் கட்டணமாக விடுதியில் தங்கிப்

பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10000/–, விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5000/– வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வுதவித் தொகை பெற பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மொத்த பயனாளிகளில் மாணவியருக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் 2,118 மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.552 இலட்சம் செலவிடப்பட்டது.

## 29. இஸ்லாமிய பள்ளி/கல்லூரி மாணவியர் விடுதிகள்

கிராமப்புறங்களில் வாழும் சிறுபான்மையின மாணவியர்கள் நகர்ப்புறங்களில் தங்கி தொடர்ந்து கல்வி பயில



ஏதுவாக உணவு மற்றும் உறைவிடம் வழங்கப்பட்டு தற்போது வேலூார், திருச்சி, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 6 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. திருச்சியில் உள்ள இஸ்லாமிய மாணவியர் விடுதி அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருநெல்வேலி இஸ்லாமிய மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி நடை பெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் 279 மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.47.45 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிற்கு ரூ.48.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 30. சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகள் வழங்கும் திட்டம்

சிறுபான்மையின மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான அரசு

பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

## 30.1. மாநில அளவிலான பரிசுகள்

மாநிலத்தில், 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்று நிலைகளில் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த 1 மாணவர் மற்றும் 1 மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.50000/–ரூ.30000/– மற்றும் ரூ.20000/– அதே போன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு முறையே ரூ.25000/– ரூ.20000/– மற்றும் ரூ.15000/– வழங்கப்படுகிறது.



## 30.2. மாவட்ட அளவிலான பரிசுகள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் , 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு, மூன்று நிலைகளில் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.3000/– ரூ.2000/– ரூ.1000/– அதே போன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு, மூன்று நிலைகளில் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.1500/– ரூ.1000/– ரூ.500/– வழங்கப்படுகிறது .

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் மாவட்ட மற்றும் மாநில அளவில் 403 மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.10.45 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிற்கு ரூ.14.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 31. உருதுமொழி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத்திட்டம்

உருதுமொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாக பயின்று மாநில அளவில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு உருது மொழி பரிசுகள் முறையே ரூ.3000/–, ரூ.2000/– மற்றும் ரூ.1000/– அதே போன்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலும் மாநில அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முறையே ரூ.2000/– ரூ1500/– மற்றும் ரூ.1000/– பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டில் 13 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயனடையும்



வகையில் ரூ.22 ஆயிரம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிற்கு ரூ.21 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 32. சிறுபான்மையினருக்கான திறன் வளர்க்கும் பயிற்சி

சிறுபான்மையினத்தைச் சார்ந்த இளைஞர்கள் தங்களது திறனை மேம்படுத்தி கொள்ளும் வகையில், ஆயத்த ஆடை வடிவமைப்பு, தையல் பயிற்சி, வெல்டிங், தச்சுவேலைப் பயிற்சி, காலணிகள் வடிவமைப்பு, கணினி மென்பொருள் போன்ற திறன் வளர்ப்பு ஆகியவற்றில் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் அரசு பயிற்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.250 இலட்சம் செலவிடப்பட்டு 10000–க்கும் அதிகமான இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். நடப்பாண்டிற்கு ரூ.250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 33. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாய மகளிருக்கு உதவும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு விதைத்தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் மூலமாக ஆதரவற்ற முஸ்லீம் விதவைகள், மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லீம் மகளிர், வயது முதிர்ந்த முஸ்லீம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவும் வகையில் தையல், பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப ஏனைய பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கு இணையான தொகை மானியமாக ஆண்டொன்றுக்கு அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை



வழங்கப்பட்டு வருகிறது. 2010–11 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.32.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 34. மாநில சிறுபான்மையினர் ஆணையம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களிலும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படுத்தப்படுவது குறித்து மதிப்பீடு செய்யவும் மற்றும் சிறுபான்மையினர் நல்வாழ்வுக்கான திட்டங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும், மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டுவருகிறது.

## 35. பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

சிறுபான்மையினர்களின் மக்கட்தொகைக்கேற்ப அனைத்து இனங்களிலும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் நியாயமான பங்கு சென்றடைவதை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களில்

நியாயமான பங்கு அளிக்கும்வகையிலும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் நம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன் சமமாகக் கிடைக்க செய்வதை உறுதி செய்தல், கல்வி வாய்ப்பை அதிகரித்தல், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல், பொருளாதார உதவியை நீட்டித்தல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும். இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக்



கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 36. மறுவாழ்வு நிதி உதவித் திட்டம்

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிறு குற்றங்களுக்காக சிறை சென்று விடுவிக்கப்பட்ட சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள் சமுதாய நோக்கர்களின் பார்வையில் கண்ணியத்துடன் வாழ்க்கை நடத்துவதற்காக சிறுவணிகம் செய்து மறுவாழ்வு பெற நிதி உதவி வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூ.10000/– வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ. 50 ஆயிரம் செலவிடப்பட்டது.

## 37. உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்க்காக்கள், ஆஷூர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகள் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் செயல்பட்டுவருகின்றது. இதுவரை இவ்வாரியத்தில் 11,307 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.



**இவ்வாரியத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.**

| 1. | விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ் | உதவித்தொகை (ரூ.) |
|---|---|---|
| | அ . விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000 |
| | ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 15000 |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 2000 |
| 4. | கல்வி உதவித்தொகை | |
| | அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1500 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3000 |

| | | |
|---|---|---|
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு (Professional Courses in Under Graduate level) | 2000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு (Professional Courses in Under Graduate level) | 4000 |
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 4000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 6000 |
| | ஒ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1200 |
| 5. | திருமண உதவித்தொகை | 2000 |
| 6. | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் | 6000 |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | 3000 |
| 7. | கண் கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | 500 (அதிகபட்சம்) |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 500 |

சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகிய அனைத்து நிலைகளிலும் சிறுபான்மையினத்தவரும் பெரும்பான்மையினத்தவருக்கு நிகராக வளர்ச்சி



அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் அதற்கான பல திட்டங்களை செம்மையாக இவ்வரசு செயல்படுத்திவருகிறது.

## 38. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடி ஆகும்.

### 38.1. தனிநபர் காலக்கடன் திட்டம்

சிறுபான்மையினர் பயனடையும் விதத்தில் அவர்களுக்கு 6 விழுக்காடு வட்டியில் சொந்தத் தொழில் / வியாபாரம் தொடங்குவதற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் வழங்கிவருகிறது. இக்கழகத்தில் ரூ.1.00 இலட்சம் வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. ரூ.1.00

இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன்கள், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்தின் அனுமதி பெற்று வழங்கப்படுகின்றது. இக்கடன்கள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்றன.

சிறுபான்மையினர்கள் ஒன்று சேர்ந்து தொழில் துறையின் மூலம் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதன் மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்கிட 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் தாய்கோ வங்கி மூலம் கடன் வழங்கப்படுகிறது.

சிறுபான்மையின மக்கள் சீருந்து / வேன் மற்றும் டிராக்டர் போன்ற போக்குவரத்து வாகனங்கள் வாங்கிட ரூ.3.13 இலட்சம் வரை கூட்டுறவு வங்கிகள் மூலம் 10 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

இரண்டு கலப்பினப் பசுக்கள் வாங்குவதற்கு ரூ.50,000/– அல்லது இரண்டு உயரக முர்ரா எருதுகள் வாங்குவதற்கு



ரூ.70,000/–, 6 விழுக்காடு வட்டியில் ஆவின் மூலமாக கடன் வழங்கப்படுகின்றது.

2010–11ஆம் ஆண்டில், ரூ.661.99 இலட்சம் கடன் வழங்கப்பட்டு 813 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## 38.2. சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், ஒருவருக்கு ரூ.25,000/– வரை, 4 விழுக்காடு வட்டியில் சிறுபான்மையினர் சுய உதவி குழுக்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு பலகாரக் கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டிக் கடை, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்திட கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறுகடன் வழங்கப்படுகிறது. 6,029 பயனாளிகளுக்கு சுய உதவிக்குழுக்கள் மூலம் ரூ.1302.54 இலட்சம் கடன் 2010–11 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## 38.3. கல்வி கடன்

தமிழ் நாட்டில் உள்ள அரசு / தனியார் கல்வி நிறுவனங்களில் எம்.பி.பி.எஸ் / பி.டி.எஸ் / பி.பார்ம் / பி.யு.எம்.எஸ் / பி.எஸ்ஸி (வேளாண்மை) / பி.இ. / பி.டெக் / பி.ஆர்க் ஆகிய தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் ஏழை சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்விக் கடன் 3 விழுக்காடு வட்டி விகிதத்தில் ஆண்டுக்கு ரூ.50,000/– வீதம் அவர்களது படிப்புக்காலம் முழுவதற்கும், அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை ரூ.2,50,000/–க்கும் மிகாமல் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. 2010–11 ஆம் ஆண்டில் 22 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12.59 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.



## 38.4. மகிளா சம்ரிதி யோஜனா திட்டம்

இத்திட்டத்தில் அரசு சாரா அமைப்புகள் மூலமாக ரூ.1,80,000/– திட்ட மதிப்பீட்டில் 40 சிறுபான்மையின மகளிர் பயன் பெறும் வகையில், தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முடிந்த உடன் பயனாளிகள் சுய உதவி குழுக்களை அமைத்து சிறுகடன் பெற்றிட ஊக்குவிக்கப்படுகின்றனர். இப்பயிற்சியின் மூலம் 2010–11 ஆம் ஆண்டில் 40 சிறுபான்மை மகளிர் ரூ.1.80 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர்.

இக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் பல கடன் திட்டங்கள் வாயிலாக 6,864 சிறுபான்மையின பயனாளிகளுக்கு 2010–2011 ஆம் ஆண்டில் ரூ.1977.12 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூ.3000 இலட்சம் கடன்களை வழங்கிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்தினால் வழங்கப்பட்ட கடனில் 90 சதவீதம் கடன்கள் திரும்பப்பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 39. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

இந்தியாவிலுள்ள வக்ஃபு சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் 1995–ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) இயற்றப்பட்டு 01.01.1996 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தில் உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டு முறையாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது.

வக்ஃபுகள் மற்றும் வக்ஃபு சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக 25 மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்கள் வக்ஃபு தீர்ப்பாயங்களாக செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள



சுமார் 6700 வக்ஃபு சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 39.1. உலமா ஓய்வூதியத்திட்டம்

1981–ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வரும் 2400 பயனாளிகளைக் கொண்ட உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 60–வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2011–12 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.312.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 39.2. மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கு உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 4(2)–ன் படி மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வழங்கப்படும் இத்தொகையினை வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்கி வருகிறது.

## 40. தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

மத்திய ஹஜ் குழு சட்டம் 2002இல் உள்ள அறிவுரைகளின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, தமிழ்நாட்டிலிருந்து புனித மக்கா நகரத்திற்கு ஹஜ் பயணத்திற்காக செல்ல விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுதல், குலுக்கல் முறையில் பயணிகளைத் தேர்வு செய்தல், ஹஜ் வழிகாட்டி மற்றும் உம்ரா



நூல்களை பயணிகளுக்கு இலவசமாக அச்சிட்டு வழங்குதல், மாவட்டந்தோறும் ஹஜ் பயணம் தொடர்பான புத்தறிவுப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல், மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பூசி போடுதல், சென்னையிலிருந்து ஜித்தா சென்று வர, நேரடி விமானப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தல், ஹஜ் பயணிகள் மக்கா மற்றும் மதினா நகரங்களில் தங்குவதற்குத் தேவையான இடவசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளைத் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு ஹஜ் பயணம் சிறப்பாக செயல்பட அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் நிர்வாகச் செலவுகளுக்கு அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகிறது.

## பகுதி II திட்டங்கள் 2011–2012

| | | (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| **வ எண்.** | **திட்டப்பணிகளின் விவரம்** | **மொத்த செலவு** | **2011–12–ல் செலவு** |
| | **தலைமைச் செயலகம்** | | |
| 1 | டிஜிட்டல் நகலி மற்றும் பிரிண்டர் ஒன்று வாங்குதல் | 1.00 | 1.00 |
| 2 | ஐந்து லேசர் பிரிண்டர் மற்றும் ஒரு டிஜிட்டல் ஸ்கேனர் வாங்குதல் | 0.55 | 0.55 |
| | **தலைமைச் செயலகம் மொத்தம்** | **1.55** | **1.55** |
| | **பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்** | | |
| 1 | **2** பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டித் தருதல் | 57.09 | 57.09 |
| 2 | **2** பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவியர் விடுதிகளுக்கு பாதுகாப்புச் சுவர்கள் கட்டித் தருதல் | 12.00 | 12.00 |
| 3 | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு நிகரி உடன் கூடிய ஸ்கேனர் இயந்திரம் வாங்கி வழங்குதல் | 6.40 | 6.40 |
| 4 | **6** மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு பழைய ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் வழங்குதல் | 33.00 | 33.00 |
| 5 | பெரம்பலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு புதிய ஈப்பு வழங்குதல் | 5.50 | 5.50 |
| 6 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககங்களுக்கு கூட்ட அரங்கம் அமைத்தல். (அறைகலன், மரவேலை, சீர்வளி சாதனம், மின் பொருத்திகள், ஒளிபடக்கருவிகள், ஒலிசார்ந்த முறை, எல்சிடி தொலைக்காட்சி பெட்டி மற்றும் ஒளிப்பேழை வசதி ஏற்படுத்துதல்) | 40.00 | 40.00 |
| 7 | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்கு இரும்பு நிலை அடுக்கு / அலமாரிகள் வாங்குதல் | 4.50 | 4.50 |
| | **பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மொத்தம்** | **158.49** | **158.49** |

| | | | |
|---|---|---|---|
| **மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்** | | | |
| 1 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு ஒரு டிஜிட்டல் மல்டிஃபங்ஷனல் காபியர் வாங்குதல் | 3.62 | 3.62 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு 6 லேசர் பிரிண்டர் கருவிகள் வழங்குதல் | 0.40 | 0.40 |
| 3 | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு இரண்டு டிஜிட்டல் ஊடுகதிர் இயந்திரம் வாங்குதல் | 0.20 | 0.20 |
| 4 | இணை இயக்குநர், மதுரை (கள்ளர் சீரமைப்பு) அலுவலகத்திற்கு 6 கணினி துணை பாகங்களுடன் வாங்குதல் | 3.00 | 3.00 |
| 5 | இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை அலுவலகத்திற்கு ஒரு டிஜிட்டல் நிகரி இயந்திரம் வாங்குதல் | 0.13 | 0.13 |
| 6 | நிலை உயர்த்தப்பட்ட 2 அரசு கள்ளர் மேல்நிலை பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல் | 40.00 | 40.00 |



| | | | |
|---|---|---|---|
| 7 | 9 அரசு கள்ளர் மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்குதல் | 19.77 | 19.77 |
| 8 | 8 கள்ளர் பள்ளிகளுக்கு (1 அலகு மாணவர்களுக்கு, 1 அலகு மாணவியர்களுக்கு) தண்ணீர் வசதியுடன் கழிவறைகள் கட்டுதல் | 46.00 | 46.00 |
| 9 | நிலை உயர்த்தப்பட்ட 2 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 21.58 | 21.58 |
| 10 | 70 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு (LPG) இணைப்புகள் வழங்குதல் | 28.00 | 28.00 |
| | **மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் மொத்தம்** | **162.70** | **162.70** |
| **சிறுபான்மையினர் நல இயக்ககம்** | | | |
| 1 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு திரையுடன் கூடிய ஒளிப்பட கருவி வழங்குதல் | 0.65 | 0.65 |
| 2 | சிறுபான்மையினர் நல ஆணையரகத்திற்கு அஞ்சல் வில்லை மதிப்பிடும் கருவி மற்றும் அஞ்சல் வில்லை பதிவு செய்யும் கருவி வழங்குதல் | 1.34 | 1.34 |

| | | | |
|---|---|---|---|
| 3 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு நிழற்படக் கருவியுடன் கூடிய 2 மடி கணினிகள் வாங்குதல் | 1.00 | 1.00 |
| 4 | சிறுபான்மையினர் நல பிரிவிற்கு பேட்டரியுடன் கூடிய சைன் வேவ் 12 வோல்ட் / 100 வாட்ஸ் இன்வெர்ட்டர் மூன்று வாங்குதல் | 0.60 | 0.60 |
| 5 | 16 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு (சிறுபான்மையினர் நல பிரிவு) கணினி, நிகரி இயந்திரம் மற்றும் ஸ்கேனர் வழங்குதல் | 12.80 | 12.80 |
| 6 | சிறுபான்மையினர் நல இயக்ககம் மற்றும் 6 இஸ்லாமிய மாணவியர் விடுதிகளுக்கு மின் துடைப்பான் கருவி வழங்குதல் | 1.05 | 1.05 |
| 7 | சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு மற்றும் 6 சிறுபான்மையினர் விடுதிகளுக்கும் தீயணைக்கும் கருவி வாங்குதல் | 0.66 | 0.66 |
| | **சிறுபான்மையினர் நல இயக்ககம் மொத்தம்** | **18.10** | **18.10** |



| | | | |
|---|---|---|---|
| | **தமிழ்நாடு வக்ஃபு போர்டு** | | |
| 1 | பெரும் பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிக்காக தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் வழங்குதல் | 60.00 | 60.00 |
| 2 | தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அறைகலன் வாங்குவதற்கு மானியம் | 0.90 | 0.90 |
| 3 | தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு 5 லேசர் பிரிண்டர்கள் வாங்குவதற்கு மானியம் | 0.60 | 0.60 |
| | தமிழ்நாடு வக்ஃபு போர்டு மொத்தம் | 61.50 | 61.50 |
| | **தமிழ்நாடு மாநில உறஜ் குழு** | | |
| 1 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு உபகரணங்களுடன் கூடிய இரு கணிப்பொறிகள் வாங்குதல் | 0.80 | 0.80 |
| | உறஜ் குழு மொத்தம் | 0.80 | 0.80 |
| | **பெரு மொத்தம்** | **403.14** | **403.14** |

## முடிவுரை

தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு மிக முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்து மேற்குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு சீரிய நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**அ. முஹம்மத்ஜான்,**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்**
**நலத்துறை அமைச்சர்.**



## இணைப்பு

## 2011-12 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 328.67 | -- | 0.01 | 328.68 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 506.60 | -- | -- | 506.60 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 21960.18 | 2109.10 | -- | 24069.28 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 22134.02 | 1500.21 | -- | 23634.23 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 78.97 | -- | -- | 78.97 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 34.81 | -- | -- | 34.81 |
| சிறுபான்மையினர் நலன் | 4946.44 | 0.01 | -- | 4946.45 |
| மொத்தம் | 49989.69 | 3609.32 | 0.01 | 53599.02 |